செய்தி வெளியீடு எண்: 386 நாள் :17.07.2013

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**
**அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க**
**மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜூ அவர்கள்**
**தலைமையில் கூட்டுறவுத்துறை உயர் அலுவலர்களின் ஆய்வுக் கூட்டம்.**

**********

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **அம்மா** அவர்களின் ஆணைக்கிணங்க இன்று (17.7.2013) காலை 11.00 மணி அளவில் சென்னை தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜூ அவர்கள் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் 2012–13 மற்றும் 2013–14 ஆம் ஆண்டுக்கான மானிய கோரிக்கையின் போது அறிவித்த அறிவிப்புகள், **மாண்புமிகு அம்மா** அவர்கள் விதி 110ன் கீழ் அறிவித்த அறிவிப்புகளின் செயலாக்கம், **டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு பருவகால பயிர் செய்வதற்கு தேவையான கடன் மற்றும் உரங்களை தட்டுப்பாடின்றி வழங்குவது,** மலைவாழ் மக்களுக்கு தங்கு தடையின்றி அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்க நகரும் நியாயவிலைக் கடைகள் அமைத்தல், புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அளவிலான கூட்டுறவுச் சங்க நிருவாகிகளுக்கு பயிற்சி அளித்தல், தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்க பணியாளர்களுக்கு ஊதிய குழு அமைத்தல், மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தை விரிவு படுத்துதல், பண்ணைப் பசுமை நுகர்வோர் கூட்டுறவு காய்கறி கடைகளை எவ்வித புகார்களுக்கும் இடம் கொடுக்காமல் செம்மையாக நடத்துதல், கூட்டுறவு வங்கிகளில் கண்காணிப்பு கேமராக்கள் நிறுவுதல், கூட்டுறவு வங்கிகளை கணினிமயமாக்கல் மற்றும் நவீனமயமாக்கல் பணிகள் குறித்த முன்னேற்றம், ரூ.20–க்கு ஒரு கிலோ அரிசி வழங்கும் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்துதல், விலைக் கட்டுப்பாட்டு நிதி ரூ.100 கோடியை பயன்படுத்தி விவசாய விளைபொருட்களை விவசாயிகளுக்கு கட்டுப்படியாகும் விலையில் கொள்முதல் செய்து பொதுமக்களுக்கு நியாயமான விலையில் தரமான பொருட்களை கூட்டுறவு அமைப்புகள் மூலம் வினியோகம் செய்வது குறித்து திட்டம் வகுத்தல் உள்ளிட்டவை குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், ஏற்கனவே, மாநில, மாவட்ட மற்றும் தொடக்க கூட்டுறவு அமைப்புகளுக்கான இந்திய அளவிலான சிறந்த செய்ல்படுகளுக்கான 4 பரிசுகளை தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு நிறுவனங்கள் பெற்றது போல, தற்போது தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் ஆகியவை கூட்டுறவு அமைப்புகளின் சிறந்த சேவைகளுக்கான தேசிய அளவிலான பரிசுகளை அண்மையில் புதுடில்லியில் நடைபெற்ற 16வது இந்திய கூட்டுறவு காங்கிரஸ் கூட்டத்தில் பெற்றதை பாராட்டியும், வருங்காலங்களிலும் தொடர்ந்து இதுபோன்ற பரிசுகளை பெறும் வகையில் சிறப்பாக செயல்படவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்.

இக்கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை செயலர் திருமதி எம்.பி.நிர்மலா, இ.ஆ.ப., கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு.பெ.சீத்தாராமன், இ.ஆ.ப., துணைச் செயலாளர் திருமதி கா.த.மணிமேகலை,இ.ஆ.ப., கூடுதல் பதிவாளர்கள் திருமதி வ.கலை அரசி, இ.ஆ.ப., திரு.கே.ராஜேந்திரன், திரு.இரா.கார்த்திகேயன், திரு.எம்.பி.சிவன்அருள், திருமதி கா.பிரமிளா மற்றும் கூட்டுறவுத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9